## செயன்முறை ∴ உளச்சார்புப் பரீட்சை சித்தி பெறுவதற்கான தேவைப்பாடு

பின்வரும் கற்கைநெறிகளை தமது விருப்பு ஒழுங்கில் குறிப்பிட்ட பரீட்சார்த்திகள் சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் செயன்முறை/ உளச்சார்புப் பரீட்சையில் கட்டாயமாகச் சித்தியடைந்திருத்தல் வேண்டும். சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகம் உளச்சார்புப் பரீட்சைக்குத் தோற்ற விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரி பத்திரிகை அறிவித்தலொன்றைப் பிரசுரிக்கும். மாணவர்கள் செயன்முறை/உளச்சார்புப் பரீட்சையில் தோற்றுவதற்கு சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகங்களுக்கு நேரடியாக கட்டாயமாக விண்ணப்பிக்க வேண்டும். பரீட்சார்த்திகள் மேலதிக விபரங்களுக்கு சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகத்தின் பதிவாளரோடு தொடர்பு கொள்ள முடியும். [சம்மந்தப்பட்ட பல்கலைக்கழகங்களின் முகவரி மற்றும் தொடர்பு இலக்கங்கள் இப்புத்தகத்தின் இணைப்பு (C) இல் தரப்பட்டுள்ளன.] **குறித்த கற்கை நெறிக்கு கருத்திற்கொள்ளப்படுவதற்கு செயன்முறை/ உளச்சார்புப் பரீட்சையில் சித்தியடைவதற்கு மேலதிகமாக உரிய கற்கைநெறியின் வெட்டுப்புள்ளித் தேவைப்பாட்டினைப் பூர்த்தி செய்திருப்பதும் கட்டாயமாகும்.**

| கற்கைநெறி | பல்கலைக்கழகம் / வளாகம் / நிறுவகம் | Uni-Code |
|---|---|---|
| கலை (SP) - வெகுசன ஊடகம் | கொழும்புப் பல்கலைக்கழகம், ஸ்ரீபாளி வளாகம் | 020S |
| கலை (SP) - அரங்கேற்றல் கலை | கொழும்புப் பல்கலைக்கழகம், ஸ்ரீபாளி வளாகம் | 041S |
| கட்டடக்கலை | மொறட்டுவைப் பல்கலைக்கழகம் | 023G |
| வடிவமைப்பு | மொறட்டுவைப் பல்கலைக்கழகம் | 024G |
| நவநாகரிக வடிவமைப்பும் உற்பத்தி அபிவிருத்தியும் | மொறட்டுவைப் பல்கலைக்கழகம் | 034G |
| இசை | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | 068C |
| இசை | யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் | 068E |
| இசை | சுவாமி விபுலானந்தர் அ. க. நிறுவகம் | 068Y |
| இசை | கட்புல,அரங்கேற்றக்கலைகள் பல்கலைக்கழகம் | 068Z |
| நடனம் | யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் | 069E |
| நடனம் | சுவாமி விபுலானந்தர் அ. க. நிறுவகம் | 069Y |
| நடனம் | கட்புல,அரங்கேற்றக்கலைகள் பல்கலைக்கழகம் | 069Z |
| சித்திரமும் வடிவமைப்பும் | யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் | 070E |
| நாடகமும் அரங்கமும் | சுவாமி விபுலானந்தர் அ. க. நிறுவகம் | 071Y |
| நாடகமும் அரங்கமும் | கட்புல,அரங்கேற்றக்கலைகள் பல்கலைக்கழகம் | 071Z |
| கட்புலமும் தொழில்நுட்பவியல் கலையும் | சுவாமி விபுலானந்தர் அ. க. நிறுவகம் | 072Y |
| உடற்றொழில் கல்வி | யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் | 081E |
| உடற்றொழில் கல்வி | இலங்கை சபரகமுவப் பல்கலைக்கழகம் | 081L |
| விளையாட்டு விஞ்ஞானமும் முகாமைத்துவமும் | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | 082C |
| விளையாட்டு விஞ்ஞானமும் முகாமைத்துவமும் | களனிப் பல்கலைக்கழகம் | 082D |
| விளையாட்டு விஞ்ஞானமும் முகாமைத்துவமும் | இலங்கை சபரகமுவப் பல்கலைக்கழகம் | 082L |
| கட்புலக் கலை | கட்புல,அரங்கேற்றக்கலைகள் பல்கலைக்கழகம் | 085Z |
| நிலத்தோற்றக் கட்டிடக்கலை | மொறட்டுவைப் பல்கலைக்கழகம் | 097G |
| சினிமா தொலைக்காட்சி பற்றிய கற்கைகள் | களனிப் பல்கலைக்கழகம் | 100D |